| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **தேனி** | காலம் : | **29/05/2024** | முதல் | **02/06/2024** | |
| அறிக்கை எண் : | **043/ 2024** | வெளியீட்டு நாள் : | | **28/05/2024** | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை** (23.5.2024 **முதல்** 27.05.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 02-06-22024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/05 | 24/05 | 25/05 | 26/05 | 27/05 | **தேதி** | **நாள்-1** 29/05 | **நாள்-2** 30/05 | **நாள்-3** 31/05 | **நாள்-4** 01/06 | **நாள்-5** 02/06 |
| 17.6 | 0.8 | 12.7 | 0.0 | 0.1 | மழை (மி.மீ) | 2 | 2 | 6 | 8 | 10 |
| 34 | 34 | 36 | 35 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 33 | 32 | 32 | 30 |
| 26 | 26 | 27 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 22 | 22 | 21 | 20 |
| 6 | 6 | 8 | 7 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 5 | 8 | 8 | 8 |
| 88 | 82 | 88 | 65 | 66 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 59 | 59 | 57 | 55 | 51 | | 50 | 50 | 50 | 50 | 40 |
| 7 | 3 | 6 | 8 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 14 | 10 | 10 | 10 |
| தென் மேற்கு | 0 | மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 30°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20° - 23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 14 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (31 மே - 06 ஜூன் 2024):

**மழைப்பொழிவு :**

31-05-2024 - 06-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

31-05-2024 - 06-06-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைந்து காணப்படும்.28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

31-05-2024 - 06-06-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 10 முதல் 14 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

29 மே முதல் 31 மே வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது 2- 3° செல்சியஸ் செல்சியஸ் அதிகரித்து காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : ரோஜா, உளுந்து, கால்நடை.**

**ரோஜா:**
இன்னும் ஓரிரு வாரங்களில் பருவமழை துவங்குவதற்கான அறிகுறிகள் காணப்படுவதால், ரோஜா மலர் சாகுபடி செய்யும் விவசாயிகள் நடவுப் பணிகளுக்கு திட்டமிடலாம்.

45செ.மீ நீள, அகல, ஆழம் உள்ள குழிகளை 2 X 1 மீட்டர் இடைவெளியில் எடுத்து நன்கு ஆறவிட்டு நடவேண்டும்.

நடுவதற்கு முன்னர் குழி ஒன்றிற்கு 10 கிலோ தொழு உரம், மற்றும் மேல்மண் இடவேண்டும். பிறகு வேர்பிடித்த பதியக் குச்சிகளை குழிகளின் மத்தியில் நட வேண்டும்.

**உளுந்து:**
நெல் தரிசு பயறு வகைப் பயிர்களுக்கு பூக்கும் தருணத்திலும் அடுத்த 15 நாட்கள் இடைவெளியிலும் டி. ஏ. பி (2சதம்) + முரியேட் ஆப் பொட்டாஷ்; (1 சதம்) கரைசலை காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும்.

டி. ஏ. பி கரைசலுக்கு மாற்றாக, "பல்ஸ் வொன்டர்" (பயறு அதிசியம்) எக்டருக்கு 5 கிலோ என்ற அளவில் மொட்டு வைக்கும் தருணத்தில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்

**கால்நடை:**
தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் தாக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன.

மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும். இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி துள்ளி விழும்.

இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரியன் உதித்து ஒரு மணி நேரம் கழித்து ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும்.